நாள் 01.04.2024 O.S. 390-18 . வா.சா.1 ராமலட்சுமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

தபசில் சொத்து 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கு சட்டபடியான உரிமை கிடையாது என்றால் சரியல்ல. 1ம் வாதி என் கணவர் ஆவார். இந்த வழக்கில் என் கணவர் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரிதான். அவர் ஒரு குடிகாரர் ஆவார். அதனால் நான் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கும், என் கணவருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 24 வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. எங்கள் திருமணத்திற்கு முன்பு நான் எந்த ஊரில் வசித்து வந்தேன் என்றால் ஒரே ஊர் தான். என் அப்பாவுடன் தெற்கு தெருவில் வசித்து வந்தேன். என் திருமணத்திற்கு முன்பு என் கணவரின் குடும்பத்தில் உள்ள சொத்து விபரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு தான் தெரியும். என் கணவரும், சங்கரையா நாயுடு என்பவரும் உடன்பிறந்த அண்ணன் தம்பி என்றால் சரிதான். எந்த சர்வே நம்பருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண் 571/11க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 571/11க்கு மேற்கே 10 நம்பர் இடமும், கிழக்கே 12ம் நம்பர் இடம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 571/11 என்னுடைய இடம். சர்வே எண் 571/12 என்று மாறியுள்ளது. சர்வே எண் 571/10, 11, 12 மூன்றும் மேற்கில் இருந்து கிழக்காக உள்ளது என்றால் சரிதான். கிழக்கே உள்ளது என்னுடைய இடம் ஆகும். 571/10ல் எவ்வளவு இடம் உள்ளது என்றும், 571/11ல் எவ்வளவு இடம் உள்ளது என்றும், 571/12ல் எவ்வளவு இடம் உள்ளது என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 571/11ல் 3 செண்ட் இடம் உள்ளது. 571/10 மற்றும் 12ல் எவ்வளவு இடம் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களிலும் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சர்வே நம்பரை என் பிராது தபசில்

விபரத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களும் எந்த வருடத்திய ஆவணங்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களை யார் எழுதி கொடுத்து யார் எழுதி வாங்கியது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களை பிறப்பித்து கொடுத்தவர்களுக்கும், என் கணவருக்கும் எப்படி சொந்தம் என்பதை நிரூபிக்க கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இருளாச்சியம்மாள் என் பாட்டி. முத்துசாமி என் தாத்தா. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களை பிறப்பித்த மற்றும் கிரையம் கொடுத்தவர்களின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நான்குமால் விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ3 ஆவணங்களை பிறப்பித்து கொடுத்த நபர்களுக்கும், என் கணவருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என் மாமனார் சுப்பையா நாயுடுவிற்கு கிடைத்து அவர் 2004ம் ஆண்டு உயில் மூலம் என் கணவருக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உயில் எங்க வைத்து எப்படி எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. உயிலில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சர்வே எண் 571/11-ம் நம்பர் பற்றி உயிலில் எழுதப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 571/12என்று தவறாக எழுதப்பட்டுள்ளது. என் மாமனார் 2010ம் ஆண்டு இறந்து போனார் என்றால் சரிதான். என் மாமனார் உயிரோடு இருந்த காலத்தில் உயிலில் திருத்தம் செய்ய ஏற்பாடு செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது தான் தவறு பற்றிய

விபரம் தெரியவந்தது. 2010ம் ஆண்டு என் மாமனார் இறந்தபிறகு உயில்படி எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உயிலில் நம்பர் மாறி போய்விட்டது என்று என் மாமனார் காலத்தில் எனக்கு தெரிந்தது என்றால் இல்லை. என் மாமனார் இறந்து எப்போது தெரிந்தது என்றால் என் மாமனார் இறந்து ஒரு வருடம் கழித்து தான் எனக்கு தெரிந்தது. உயிலில் வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்களும் எழுதப்பட்டுள்ளது என்றால் உயிலில் என்னென்ன சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதே அது வாங்கப்பட்டது. உயிலில் கண்டுள்ள சொத்துக்களுக்கு பட்டா வாங்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. இன்றுவரை உயிலை அனுசரித்து பிராது தபசில் சொத்திற்கு எங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயிலில் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். உயிலின் அடிப்படையில் பிராது தபசில் சொத்திற்கு என் கணவருக்கு எந்த உரிமையும் பாத்தியப்படாது என்றால் சரியல்ல. சர்வே எண் 571/ 10,11,12 எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்பதை நிரூபணம் செய்ய நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புல எண்களும் எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்பது தெரிந்தால் தான் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள விஸ்தீரணத்தை ஒப்பிட்டு பார்க்கமுடியும் என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்ணில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் நான் தான் குடியிருந்து வருகிறேன். தாவா சர்வே நம்பர் மொத்தம் 3 செண்ட் பரப்பளவு கொண்டது என்றால் சரிதான். 8.2.2017ம் தேதியில் தாவா சொத்தில் இருந்து 3/4செண்ட் இடத்தை 2,3 பிரதிவாதிகளிடம் கிரையம் வாங்கியதாக பத்திரம் போடப்பட்டது என்றால் சரிதான். என்னை ஏமாற்றி கிரையம் கொடுத்து விட்டார்கள். கிரையம் போட சென்ற போது என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் எனது இரண்டு மச்சான்கள், மற்றும் என்

சித்தப்பா மற்றும் என் மச்சான் மனைவி, நாத்தனார் ஆகியோர்கள் உடன் வந்தார்கள். என்னுடன் வந்தவர்கள் படித்தவர்கள் என்றால் சரிதான். பத்திரம் போடுவதற்கு முன்பு பத்திர எழுத்தர் என்னிடம் படித்து காட்டினாரா என்றால் படித்து காண்ப்பிக்கவில்லை. நான் கைநாட்டு தான் செய்தேன். என்னுடன் வந்தவர்களிடம் என்ன எழுதியுள்ளது என்று படிக்க சொல்லவில்லை என்றால் சரிதான். பத்திரத்தில் ரூ.10ஆயிரம் கொடுத்து கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். நான் பணம் கொடுக்கவில்லை. அதே 8.2.2017ம் தேதியில் என் கணவருடன் பிறந்த அண்ணன் சங்கரையா நாயுடு என்பவர் 2,3 பிரதிவாதிகளிடம் 3/4 செண்டை கிரையம் வாங்கினார் என்றால் ஏமாற்றி கிரையம் கொடுத்து விட்டார்கள். மேற்படி கிரைய முடித்த தேதியில் இருந்து இன்றுவரை சங்கரையா நாயுடு ஏமாற்றி கிரையம் கொடுத்துவிட்டதாக புகார் கொடுக்கவில்லை , நீதிமன்றத்திலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். முழு சொத்திற்கு எனக்கு மட்டும் பாத்தியப்பட்டதா அல்லது சங்கரையா நாயுடுவிற்கும் பங்கு உள்ளதா என்றால் சங்கரையா நாயுடுவிற்கு பங்கு கிடையாது. பிராது தபசில் சொத்தில் முழுவதும் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறேன் என்றால் 20வருடமாக குடியிருந்து வருகிறேன். முழு சொத்திலும் 20வருடமாக நான் தான் குடியிருந்து வருகிறேன் என்ற என் அனுபவத்தை நிரூபிக்க எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வீட்டில் நான் குடியிருந்து வருவதற்குரிய குடிநீர் இணைப்பிற்கான ரசீது தற்போது வாங்கியுள்ளேன். பழைய வீட்டு ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். பிராது தபசில் சொத்து 3செண்டில் எனக்கும், என் கணவருக்கும், என் கணவரின் அண்ணனுக்கும் கிரையம் கொடுத்தஇடம் போக 2,3 பிரதிவாதிகள் மீதி இடத்தை கம்பி வேலி போட்டு வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சி தற்போது எங்கள் இடத்தில் நான் தான் கம்பி வேலி போட்டு அனுபவம் செய்ததாக கூறுகிறார். பிராது தபசில் சொத்திற்கு மேற்கே உள்ள இடத்தில் என் கணவரின் அண்ணன் சங்கரையா வசித்து வருகிறார் என்றால் சர்வே எண் 571/11ல் தான் சங்கரையா

நாயுடு வசித்து வருகிறார். சர்வே எண் 571/10ல் மாடசாமி நாயுடு குடியிருந்து வருகிறார். தபசில் சொத்திற்கு மேற்கே மாடசாமி நாயுடு வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா வழக்கில் தபசில் சொத்திற்கு மேற்கே ராமசாமி இடம் என்று சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசாமி என்பவர் என் கணவருடன் பிறந்த அண்ணன் சங்கரையாவின் பேரன் தான் ராமசாமி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் காட்டி சர்வே எண் 571/10க்கு தான் உரிமை கோரி பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சங்கரையா நாயுடுவின் பேரன் இருந்து வருகிறார். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தில் அதில் கண்ட நிலத்திற்கு மொத்த விஸ்தீரணம் 4 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 571/10ன் பரப்பளவு தற்போது 4 செண்டாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அனுசரித்து என் கணவருக்கும், அவரது சகோதரருக்கும் பாத்தியப்பட்ட இடத்தை நாங்கள் கூட்டாக அனுபவம் செய்து கொண்டு 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் சட்டத்திற்கு புறம்பாக பங்கு கேட்கிறேன்என்றால் சரியல்ல. எனக்கு உரிய நிலம் வேண்டும் என்றால் என் கணவருடன் பிறந்த சங்கரையா நாயுடுவின் தான் கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் தற்போதைய புலஎண்கள் இல்லாமல் பழைய புல எண்கள் உள்ள காரணத்தினால் அதை எனக்கு சாதகமாக எடுத்து கொண்டு சட்டத்திற்கு புறம்பாக பிராதுதபசில் சொத்து முழுவதும் எனக்கு பாத்தியப்பட்டது என தவறான சங்கதி கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து முழுவதும் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களிடம் இருந்து கிரையம் பெற்று விட்டு தற்போது முரன்பட்டு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மோசடியாக இறப்பு சான்று பெற்றார் என்று சொல்லியுள்ள நிலையில் அதுகுறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்து 2ம் பிரதிவாதி மீது வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தரப்பு வழக்கை

நிரூபணம் செய்ய நான் போதிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாய் 1960ம் ஆண்டு முதல் பிராது தபசில் சொத்திற்கு 1,2 பிரதிவாதிகளின் முன்னோர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டு பத்திரங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பட்டா, பத்திரங்களை எதிர்த்து வருவாய் அதிகாரிகளிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் தான் பிரதிவாதிகளின் குடும்பத்திற்குள் நன்கொடை, பாகபிரிவனை ஏற்படுத்திகொண்டார்கள் என்றாலும் அது மோசடி என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. இடம் சம்பந்தமாக என் மீது புளியரை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் குடிகாரர். பிரதிவாதிகள் வீட்டில் காவல்துறையில் பணிபுரிந்து வருகிறார்கள். என் வழக்கு பொய் என்றாலும் அது தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.